செ.வெ.எண்.612 நாள்.01.12.2017

**காஞ்சிபுரம் மாவட்டம்**
**சமூக நலத்துறை மற்றும் சத்துணவுத் திட்டத்துறை**
**ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்டம் சார்பில் சமுதாய வளைகாப்பு விழா மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.பா.பொன்னையா இ.ஆ.ப., அவர்கள் பங்கேற்று பெண்களுக்கு சீர்வரிசை வழங்கி வாழ்த்தினார்**

இவ்விழாவில் பேசிய மாவட்ட ஆட்சித்தலைவர்,

ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்டம் காஞ்சிபுரம் மாவட்டத்தில் சமுதாய வளைகாப்பு விழா 13 திட்டங்களில் ஒரு இடத்திற்கு 40 கர்ப்பிணிகள் வீதம் 81 இடங்களில் 3240 கர்ப்பிணி பெண்களுக்கு சமுதாய வளைகாப்பு விழா இன்று சிறப்பாக நடைபெற்றது. இதில், காஞ்சிபுரம் நகர்புறத்தை சார்ந்த 160 கர்ப்பிணி பெண்களுக்கு இங்கு சமுதாய வளைகாப்பு விழா கொண்டாடப்படுகிறது.

கர்ப்பிணி பெண்களுக்கு வலைகாப்பு என்பது மிக முக்கிய நிகழ்வாகும். ஏழை, எளிய குடும்பத்தைச் சார்ந்த பெண்களுக்கு குடும்பத்தில் வறுமை காரணமாக இந்நிகழ்ச்சி நடைபெறாமல் இருக்கக்கூடாது என்கிற காரணத்தினால் தான் தமிழக அரசு இத்திட்டத்தை செயல்படுத்தியுள்ளது. பெண்களின் திருமணத்திற்கு மாங்கல்யத்திற்கு 8 கிராம் தங்கம் மற்றும் நிதியுதவி திட்டம் மற்றும் கருவுற்ற தாய்மார்களுக்கு ரூ.18,000 நிதியுதவி உள்ளிட்ட திட்டங்கள் ஏழை பெண்களின் வாழ்க்கையில் மறக்க முடியாத உன்னத திட்டங்களாகும்.

காஞ்சிபுரம் மாவட்டத்தில் இயங்கும் மொத்தம் 2344 அங்கன்வாடி மையங்களில் 15,363 கர்ப்பிணி பெண்கள் பயனடைந்து வருகின்றனர். இவர்களை அங்கன்வாடி மையத்தில் பதிவு செய்து ஒரு நாளைக்கு 220 கிராம் வீதம் சத்துமாவு உடன் நலக்கல்வி வழங்கப்படுகின்றது.

இவ்விழாவில் கருவுற்ற பெண்களுக்கு ஊட்டச்த்து பற்றியும் தன் சுத்தம் பற்றியும் எடுத்து கூறப்பட்டுள்ளது. கருவுற்ற பெண்கள் கருவுற்ற காலத்தில் 10 கிலோ எடை கூட வேண்டும் என்றும், சத்தாண உணவுகளை 5 வேளை சாப்பிட வேண்டும் என கர்ப்பிணி பெண்களுக்கு கூறப்படுகின்றது. கர்ப்பிணி பெண்கள் ஆரோக்கியமாகவும், மகிழ்ச்சியாகவும்

இருந்தால் தான் கருவில் உள்ள குழந்தை 3 கிலோ எடையில் ஆரோக்கியமாக பிறக்கும் என்பதற்கான விழிப்புணர்வும் கொடுக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு இல்லத்திலும் நடைபெறும் இந்த மங்கலகரமான நிகழ்ச்சி இன்று ஏழை,எளிய நலிவுற்ற குடும்பங்களைச் சேர்ந்த பல இல்லத்தரசிகளுக்கு நடைபெற்றுள்ளது நிறைந்த மனநிறைவை தருகிறது என தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் காஞ்சிபுரம் சட்டமன்ற உறுப்பினர் திரு.சி.வி.எம்.பி.எழிலரசன், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்ட அலுவலர் திருமதி.சற்குணா மற்றும் மகளிர் சுயஉதவிக்குழுவினர் பெருமளவில் பங்கேற்றனர்.

செய்தி வெளியீடு,
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
காஞ்சிபுரம்.